**வெற்றிடங்கள்**
**தகவலுக்கான உரிமை ஆணைக்குழு**
**(2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது)**

தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு கீழுள்ள தகைமைகளைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.இப் பதவிக்கு முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் 01/2025 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கமைய சம்பளம் வழங்கப்படும்.

**தகவல் தொழில்நுட்ப உதவியாளர் - பதவி 01**

**தகைமைகள்:**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழில் சார் தகைமை(NVQ) ஐந்தாம்(05) நிலைக்குக் குறையாது தகவல் தொழில்நுட்பத் துறையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**வயது:** 22 வயதுக்கு குறையாத மற்றும் 45 இற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:MA 2-1- 2025 ரூபா(50,540 - 10 X 540 – 7 X 630 – 4 X 890 – 20 X 1,190 -87,710)**

**ஆட்சேர்ப்பு முறை:**

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**

| | | |
|---|---|---|
| 1. | தொடர்புடைய மேலதிக அனுபவம் | 30 புள்ளிகள் |
| 2. | தொடர்புடைய மேலதிக கல்வித்/தொழில்சார்தகைமைகள் | 30 புள்ளிகள் |
| 3. | ஏனைய செயற்றிறன் மற்றும் திறமைகள் | 15 புள்ளிகள் |
| 4. | நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கும் செயற்றிறன் | 25 புள்ளிகள் |
| | **மொத்தப் புள்ளிகள்** | **100** புள்ளிகள் |

**பொதுவான நிபந்தனைகள்**

1. அரச கூட்டுத்தாபனம்/நியதிச்சட்ட சபை/ஆணைக்குழுகளில் கடமையாற்றுபவர்கள் தங்களது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவர் மூலம் அனுப்ப வேண்டும்.

2. தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் 1956 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க அரச மொழிக் கொள்கையின் கீழ் விதிக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டுவார்கள்.

3. நியமனத் திகதியிலிருந்து, ஆணைக்குழு ஊழியர் சேமலாப நிதிக்கு 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு 3% பங்களிப்பைச் செலுத்தும்.

4. நியமனம் பெறுபவர்களுக்கு அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் கீழ் மருத்துவக் காப்பீடு கிடைக்கப் பெறும்.
5. அனைத்து பதவிகளுக்கும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் உரித்துடையதாகும்.

விண்ணப்பதாரர்கள் தங்களது சான்றிதழ்களின் பிரதிகளுடன் தங்களால் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவை அடங்கிய விண்ணப்பத்தை 2026.02.27 ஆம் திகதி பி.ப. 4.00 க்கு முன்னர் கிடைக்குமாறு கீழ்

குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும். கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் ''தகவல் தொழில்நுட்ப உதவியாளர்'' என பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்
தகவலுக்கான உரிமை ஆணைக்குழு
அறை இலக்கம் 203
கட்டட இலக்கம் 02
பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம்
கொழும்பு 07.